<u>சாதாரண கூட்டம்</u>

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2023ம் ஆண்டு** ஏப்ரல் மாதம் 19 **நாள்** புதன்கிழமை காலை 11.000 **மணிக்கு நடைபெற்ற** சாதாரணக் **கூட்ட நடவடிக்கைகள்**

<table>
<tr><th>மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>19.04.2023</td><td>பொருள் எண் 1<br>நகராட்சி ஆணையர் அவர்களது மார்ச் 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)</td><td>தீர்மானம் எண்:- 173<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>19.04.2023</td><td>பொருள் எண் 2<br>நகராட்சி பொறியாளர் அவர்களது மார்ச் 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)</td><td>தீர்மானம் எண்:- 174<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>19.04.2023</td><td>பொருள் எண் 3<br>கூத்தாநல்லூர் நகராட்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1652/2023/ம.தி-1 நாள் 20.02.2023ன்படி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு 09.03.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரியதில் ஒப்பந்தபுள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்குறிப்பிட்டுள்ளவாறு இரண்டு நபர்கள் மட்டும் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். ஏலம் கோரிய விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>கலந்து கொண்டவர்களின் பெயர்</th><th>குறைந்தபட்ச ஏலத்தொகை (ரூ)</th><th>கோரப்பட்ட ஏலத்தொகை (ரூ)</th></tr>
<tr><td>1</td><td>திரு.பி.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் மரக்கடை மெயின் ரோடு லெட்சுமாங்குடி</td><td rowspan="2">1,25,000</td><td>1,30,000</td></tr>
<tr><td>2</td><td>திரு.வீ.எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு லெட்சுமாங்குடி</td><td>1,29,000</td></tr>
</table>
</td><td>தீர்மானம் எண்:- 175<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு<br>அ) மேற்காணும் ஏலக்கேள்வியில் வரிசை எண் 1ல் காணும் திரு.பி.செந்தில்நாதன், ஒப்பந்ததாரர், மரக்கடை மெயின்ரோடு லெட்சுமாங்குடி என்பவரின் ரூ.1,30,000/-க்கான ஏலக்கேள்வி அதிகமாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம்<br>ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.272/2021/இ1 | |
| 19.04.2023 | **பொருள் எண் 4**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 மற்றும் 17ல் நமக்கு நாமே திட்டம் 2022-2023ன் கீழ் CCTV Camera பொருத்தும் பணிக்கு ரூபாய் 9.42 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு பெறப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 757/2021/இ1) | தீர்மானம் எண்:- 176<br>அனுமதிக்கப்பட்டது |
| 19.04.2023 | **பொருள் எண் 5**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 மற்றும் 15ல் நமக்கு நாமே திட்டம் 2022-2023ன் கீழ் CCTV Camera பொருத்தும் பணிக்கு ரூபாய் 11.58 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு பெறப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 757/2021/இ1) | தீர்மானம் எண்:- 177<br>அனுமதிக்கப்பட்டது |

19.04.2023

**பொருள் எண் 6**

இந்நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி "அரசு பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலைச்சிற்றுண்டி வழங்கப்படும்" என்ற அறிவிப்பினை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/எம்1 நாள் 10.03.2023ன்படி இந்நகராட்சி பகுதியில் மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட "ஒருங்கிணைப்பு சமையற்கூடம்" கூத்தாநல்லூர் நகராட்சி அருகில் உள்ள பேருந்து நிலைய இடத்தில் புதியதாக கட்டுவதற்கு ரூ.26.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2370/2011/இ1)

**தீர்மானம் எண்:- 178**

**அனுமதிக்கப்பட்டது**

---

19.04.2023

**பொருள் எண் 7**

இந்நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அரசு பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலைச்சிற்றுண்டி வழங்கவேண்டும் என்ற அறிவிப்பினை தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய இடத்தில் புதியதாக ஒருங்கிணைப்பு சமையற்கூடம் கட்டும் பணிக்கு 06.04.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஜி.கலியமூர்த்தி ஒப்பந்ததாரர் கீழவாழாச்சேரி | 2193887 | 2193135.30 | 0.03 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | கலை கண்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி | 2193887 | 2330029.29 | 6.21 % மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள. திரு.ஜி.கலியமூர்த்தி ஒப்பந்ததாரர் கீழவாழாச்சேரி என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.03% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலோ அல்லது சிறப்பு நிதி பெற்று பணி மேற்கொள்ளலாம். (ந.க.எண்.355/2023/இ1)

**தீர்மானம் எண்:- 179**

**அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| 19.04.2023 | **பொருள் எண் 8**<br>இந்நகராட்சியின் பழைய அலுவலக கட்டிடம் கட்டி 48 வருடங்களுக்கு மேலாகி பழுதடைந்து உள்ளதால் பாதுகாப்பு கருதி இக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண். 330/2023/இ1 நாள் 27.01.2023ல் அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி கட்டிடத்தை இடித்து அப்பறப்படுத்தி ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 907/2021/இ1) | **தீர்மானம் எண்:- 180**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 19.04.2023 | **பொருள் எண் 9**<br>இந்நகராட்சியில் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.21.43 கோடியில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் 15/02/22 அன்று M/s சரவணா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திண்டுக்கல் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்கான தரம் மற்றும் அளவீடுகளை கண்காணிக்க PMC (Project Management Consultant) நியமிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி விருப்பம் உள்ள நபர்களை தேர்ந்தெடுத்து விலைப்புள்ளி கோரவும், இதற்கான உத்தேச செலவினமான மதிப்பீட்டில் 2% (ரூ.43.00 இலட்சம்) தொகையை TUFIDCO நிறுவனம் அல்லது வேறு திட்டத்தின் கீழ் பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 412/2022/இ1) | **தீர்மானம் எண்:- 181**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 19.04.2023 | **பொருள் எண் 10**<br>**இந்நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டின் பொது நிதி, குடிநீர் நிதியின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.**<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 338/2023/பி1) | தீர்மானம் எண்:- 182<br>அனுமதிக்கப்பட்டது |
| 19.04.2023 | **பொருள் எண் 11**<br>இந்நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை தயார் செய்து **மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.**<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 014/2021/சி1) | தீர்மானம் எண்:- 183<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 19.04.2023 | **பொருள் எண் 12**<br>கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தூய்மை பணியாளர்களை வழங்கி வரும் நிறுவனத்தின் அனுமதி காலம் 31.03.2023 உடன் முடிவடைய உள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 10.01.2023ந் தேதிய உத்தரவு ந.க.எண். 35295/2022/EA2-SWM -6 ல் 3 வருட காலத்திற்கு புதிய ஒப்பந்தம் மேற்கொள்ள அனுமதி வரப்பெற்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு நகர்மன்றத்தின் அனுமதிபெற்று பணி தொடர காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி 01.04.2023 முதல் 31.05.2023 வரை 2 மாத காலத்திற்கு அல்லது புதிய ஒப்பந்தம் போடப்பட்டு ஒப்பந்ததாரர் பணியினை தொடரும் வரை ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளப்பட்டு வரும் அதே நிறுவனத்திற்கு பணியினை நீட்டித்து வழங்கவும் அதற்காகும் கூடுதல் செலவினத் தொகை ரூ.19.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 17.03.2023 அன்று முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 445/2019/எச்1) | **தீர்மானம் எண்:- 184**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 19.04.2023 | **பொருள் எண் 13**<br>**இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் அன்றாட தூய்மை பணி மேற்கொள்வதற்கு தேவையான பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு மற்றும் தளவாட பொருட்கள் மற்றும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கும், டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் மற்றும் மழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின்போது தேவையான பொருட்களை கொள்முதல் செய்வதற்கு** 01.04.2023 **முதல்** 31.03.2024 **வரை ஒரு வருட காலத்திற்கு உத்தேச செலவினம் ரூ**.9,00,000/-**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 118/2023/எச்1) | தீர்மானம் எண்:- 185<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 19.04.2023 | **பொருள் எண் 14**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 18275/2022/CFC-1 நாள் 21.03.2023ன்படி இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு ஒரு BOV வாகனம் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 15th CFC – Tied Grant மான்ய நிதியிலிருந்து வாங்கிக் கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி செயல்முறை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 474/2023/இ1) | தீர்மானம் எண்:- 186<br>அனுமதிக்கப்பட்டது |
| 19.04.2023 | **பொருள் எண் 15**<br>15வது நிதிக்குழு மான்யம் Un-Tied Grant 2022-2023ன் கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ.32.00 இலட்சத்தில் எற்கனவே அனுமதிக்கப்பட்ட பணிக்கு ரூ.2.66 இலட்சம் ஒதுக்கப்பட்டும் மீதமுள்ள ரூ.29.34 இலட்சத்திற்கு வார்டு எண் 17 மற்றும் 21 வது வார்டுகளில் தார்சாலைகளை புதுப்பிக்கும் பணிக்கு மதிப்பிடுகள் தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.705/2021/இ1) | **தீர்மானம் எண்:- 187**<br>அனுமதிக்கப்பட்டது |
| 19.04.2023 | **பொருள் எண் 16**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 26467/2022/அம்ருட்-1 நாள் 10.01.2023ன் கடிதத்தின்படி இந்நகராட்சியில் அம்ருட் 2.0 திட்டத்தின் கீழ் கூத்தாநல்லூர் நகராட்சியில் குடிநீர் விநியோக மேம்பாடு பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளி கோரும் விளம்பரம் Bright Advertising No 13 Moores Road Thousand Lights Chennai அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது, மேற்படி விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.21,773/-ஐ மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. தற்சமயம் பொது நிதியில் மேற்கொள்ளலாம்./ அம்ருட் 2.0 நிதி ஒதுக்கீட்டில் ஈடு செய்து கொள்ளலாம். (ந.க.எண். 1739/2023/இ1) | தீர்மானம் எண்:- 188<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>19.04.2023</td>
<td>
பொருள் எண் 17<br>
சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட 2022-2023ன்படி செயல்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவாரூர் அவர்களின் செயலாணைகள் ந.க.எண். 81/2023/அ5 நாள் 30.03.2023 அனறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளின் விபரம் கீழ்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண் 5 மேல பணங்காட்டாங்குடியில் பயணியர் நிழற்குடை கட்டுதல்</td><td>7.00</td></tr>
<tr><td>2</td><td>வார்டு எண் 8 அப்துல் ரஹ்மான் சாலையில் பொது விநியோக கட்டிடம் கட்டுதல்</td><td>12.00</td></tr>
<tr><td>3</td><td>வார்டு எண் 9 லெட்சுமாங்குடி கடைத்தெருவில் பயணியர் நிழற்குடை அமைத்தல்</td><td>5.00</td></tr>
<tr><td>4</td><td>வார்டு எண் 11 மரக்கடை மெயின்ரோட்டில் பயணியர் நிழற்குடை அமைத்தல்</td><td>5.00</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>29.00</td></tr>
</table>
மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 1692/2023/இ1
</td>
<td>தீர்மானம் எண்:- 189<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 19.04.2023 | **பொருள் எண் 18** | **தீர்மானம் எண்:- 190 அனுமதிக்கப்பட்டது** |

**பொருள் எண் 18**

கூத்தாநல்லூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் முதல் நிலை குப்பை சேகரிக்கும் பணிகளுக்கு மட்டும் பணியாளர்கள், வாகனங்கள் ஆகியவற்றை Serivice Provider Agency Contractor மூலம் மூன்றாண்டுகள் மேற்கொள்ளும் பணிக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.134.65 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் 159 நாள் 25.01.2023ன்படி அனுமதி அளித்துள்ள இப்பணிக்கு 27.03.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரணடு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி மதிப்பீடு | ஒப்பந்தபுள்ளி தொகை | ஒப்பந்தபுள்ளி சதவீதம் குறைவு/ அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | MSG Infra, No.94. Karupps Nagar. Nilasi Therku Thottam, Thanjavur | Rs. 3696.62/1MT | Rs.3693.60/1MT | 0.08% குறைவு |
| 2 | Jayaram Venturer, Old No. 19. New No 09, Dr. Radhakrishnan Salai 8th Street, Mylapore, Chennai Tamilnadu 600 004 | | Rs.3696.00/1MT | 0.02% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.08 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள MSG Infra, No.94, Karupps Nagar, Nilssri Therku Thottam, Thanjavur என்ற ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 1161/2022/எச்1)

ஒம்/ திருமதி.மு.பாத்திமா பஷீரா
நகர்மன்றதலைவர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உண்மை நகல் உத்தரவின்படி/

மேலாளர்
கூத்தாநல்லூர் நகராட்சி